# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102036

1. District : மாவட்டம் விருதுநகர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 1/2018 Date: நாள் 03.02.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு 02.02.2018 Time from : நேரம் முதல் 13.30 மணி முதல் 17.00 மணி வரை Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.02.2018 Time : நேரம் 10.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.02.2018 10.00 மணி Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 கி.மீ. மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார வளர்ச்சி அலுவலகம் சிவகாசி விருதுநகர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.த. வடிவேலன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1970 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி கோவை அய்யனார் அலுவலர் இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.T. செல்வக்குமார், த/பெ. தங்கராஜ், உதவியாளர் [அ-1] வட்டார வளர்ச்சி அலுவலகம், சிவகாசி விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 03.02.2018ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் R. சீனிவாசபெருமாள் ஆகிய நான் அலுவல பணியாக இலஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர் [illegible] திரு. [illegible] அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர் ரோடு திருத்தங்கல் அலுவலகத்தில் வைத்து புகார் செய்த [illegible] இணை ஆய்வு

[தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் காணப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. சீனிவாசபெருமாள் பதவி காவல் துணை கண்காணிப்பாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 3.2.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

R. [signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:

Name: பெயர் R. சீனிவாசபெருமாள்

நாள்.02.02.2018 இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.லட்சுமணன், துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம். பெறுநர், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் ரோடு, திருத்தங்கல்லில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. நான் 02.02.2018ம் தேதி காலை 10.00மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது,விருதுநகர் மாவட்டம்,வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் ரோடு, திருத்தங்கல்லில் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி நான் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்து, விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.விஜயகாண்டீபன் அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய இரண்டு அரசு சாட்சிகளான 1)திரு.ப.குருசாமி (47/18),இளநிலை உதவியாளர்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர், 2) திரு.கருப்பசாமி (38/18),இளநிலை வருவாய் உதவியாளர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், விருதுநகர் ஆகியோர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுடன்02.02.2018ஆம் தேதி மதியம் 1.00 மணிக்கு புறப்பட்டுச்சென்று வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் ரோடு, திருத்தங்கல்லில் 02.02.2018ஆம் தேதி பிற்பகல் 1.30 மணிமுதல் மாலை 5.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் திரு.செல்வக்குமார் (30/18), த/பெ.தங்கராஜ், உதவியாளர் அ4, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத பணம் ரூபாய் 44,140/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் இணை ஆய்வுசோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன தொகை ரூ.44,140/- அவர், அவருடைய இருக்கையில் இருந்துகொண்டு அரசுவேலையை செய்து கொடுத்ததற்காகவும், செய்து கொடுப்பதற்காகவும் அன்றையதினம் (02.02.2018) மேற்படி அலுவலகத்திற்கு அலுவலகரீதியாக அவரை சந்திக்க வந்த பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி, அந்த தொகை ரூ.44,140/- கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 02.02.2018ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 5.00 மணிக்கு முடிக்கப்பட்டது.அந்த திடீர் இணை ஆய்வு விபரம்:- 1.ஆய்வு செய்த அலுவலகம்: வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் ரோடு,

திருத்தங்கல், 2.ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்: 02.02.2018 ஆம் தேதி மதியம் சுமார் 1.30 மணி 3.ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் : திரு.லட்சுமணன் (47/17) துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம், 4.ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்கள்: 1)திரு.விஜயகாண்டீபன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்,2)திரு.ப.குருசாமி (47/18), இளநிலை உதவியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர், 3)திரு.கருப்பசாமி (38/18),இளநிலை வருவாய் உதவியாளர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், விருதுநகர்,5.ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள்: அலுவலக வளாகத்தில் கண்டெயினரில் பணம் பெறும் கவுண்டரில் (செயலிடைமேடை) இருந்த அலுவலர்.1)திரு.செல்வக்குமார் (30/18), த/பெ.தங்கராஜ், உதவியாளர் அ4, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி. வட்டார போக்குவரத்து அலுவலர் உள்ள கட்டிடத்தில் இருந்த அலுவலர்கள். 2) திரு.C.நடராஜன் (51/18), த/பெ.செல்லப்பன், வட்டார போக்குவரத்து அலுவலர், சிவகாசி, 3) திரு.குமாரவேல் (47/18), த/பெ.கதிரேசன், கண்காணிப்பாளர் "பி" பிரிவு, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 4)திரு.ஜெயகிருஷ்ணன் (34/18), த/பெ.பொன்னுமுத்து, கணக்கர் "அ1" இருக்கை, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 5) திரு.நாகரத்தினம் (42/18) உதவியாளர் "அ3" இருக்கை, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 6) திருமதி.மலைக்கனி (40/18), க/பெ.பெரியசாமி, உதவியாளர் "பி1" இருக்கை, வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 7) திரு.சிங்காரவேலன் (58/18), த/பெ.மூக்காண்டி, பதிவறை எழுத்தர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 8) திரு.கனகராஜ் (33/18), த/பெ.தங்கவேல், கணிணி நிரலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, 9)திரு.வீரவடிவேல்முருகன் (32/18), த/பெ.அழகர்சாமி, எல்காட் பணியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி. கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 02.02.2018ஆம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு காலம் 3 மற்றும் 4 கண்ட அலுவலர்கள் சகிதம் திருத்தங்கல்லில் உள்ள விருதுநகர் ரோட்டில் அமைந்துள்ள சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகம் விருதுநகர்-திருத்தங்கல் ரோட்டில் கனி திருமண மகாலுக்கு அடுத்தாற்போல் தெற்கே இராஜபாளையத்தைச் சேர்ந்த திருப்பதி என்பவருக்கு சொந்தமான

கட்டிடத்தில் கிழக்கு வாசல் கொண்ட காம்பவுண்ட்டிற்குள் தெற்குபார்த்த வாசல் கொண்ட கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி வளாகத்தில் உள்ளே நுழைய இடதுபக்கம் கன்டெயினர் ஒன்று உள்ளது. அந்த கன்டெயினர் இரண்டாக பிரிக்கப்பட்டு, ஒருபகுதி பணம் பெறும் கவுண்டராகவும் (செயலிடைமேடை), மற்றொரு பகுதி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அலுவலகமாகவும் செயல்பட்டு வருகிறது. அதற்கு எதிர்த்தார்போல் தெற்குபார்த்த இரண்டு வாசல்களுடன் கூடிய கட்டிடம் உள்ளது. அதில் கீழ்பக்க வாசல் உள்ள பகுதியில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலகம் உள்ளது. அதற்கு மேல்பக்க வாசல் உள்ள பகுதியில் வாகன ஓட்டுநர் உரிமத்திற்காக போட்டோ எடுக்கும் சிறிய அறை (ELCOT) உள்ளது. மேற்படி கீழ்பக்க வாசல் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைய, கிழக்கு பார்த்து கணிணி அறை உள்ளது. அதற்கு எதிர்த்தார்போல் வடக்குபார்த்து வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை உள்ளது. அந்த அறைக்கு எதிர்த்தார்போல் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அலுவலர்களின் இருக்கைகள் உள்ளன. மேற்படி வளாகத்தில் உள்ளே நுழைந்தவுடன் இடதுபக்கம் இருந்த, இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்ட கன்டெயினரின் ஒருபகுதியில் பணம் பெறும் கவுண்டரில் இருந்த காலம்-5, வரிசை எண்.1ல் கண்ட நபரான திரு.செல்வக்குமாரிடம் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.லட்சுமணன் அவர்கள் தன்னையும், அரசு சாட்சிகள் திரு.குருசாமி, திரு.கருப்பசாமி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகம் செய்து, அவரை சோதனை செய்ததில் அவரிடம் பணமோ, பொருளோ இல்லை. அதனைத் தொடர்ந்து அவரது மேஜை டிராயரை சோதனை செய்ய, அதில் கத்தைகத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை காலம்-4, வரிசை எண்கள்.3, 4ல் கண்ட அரசு சாட்சிகளான திரு.குருசாமி மற்றும் திரு.கருப்பசாமி ஆகியோர்களை எடுத்து எண்ணிப்பார்க்கச் சொல்ல, அதில் பணம் ரூ.1,37,690/- இருந்தது. அந்த பணம் பற்றி மேற்படி திரு.செல்வக்குமாரிடம் விசாரிக்க, அவர் அந்த பணத்தில் ரூ.93,550/-ஐ இன்றைய தினம் (02.02.2018) ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காகவும், ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிப்பதற்காகவும், ஓட்டுநர் உரிம நகல் பெறுவதற்காகவும், டிரைவிங் டெஸ்ட்க்காகவும், மற்றும் பார்ம்-7 கட்டணத்திற்காகவும், கற்றுக்கொள்வோர் உரிமத்தேர்வுக்காகவும், கற்றுக்கொள்வோர் பதிவு செய்வதற்காகவும் உள்ள 13 வகையான கட்டணங்களை ஆன்-லைன் மூலமாக வசூல் செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார். மீதித்தொகையான ரூ.44,140/- பற்றி கேட்க, மேற்படி திரு.செல்வக்குமார் அவர்கள் அந்த தொகைக்கு தகுந்த விளக்கம் ஏதும் கொடுக்கவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.44,140/-ம் அவர், அவருடைய இருக்கையில் இருந்துகொண்டு அரசுவேலையை செய்து

கொடுத்ததற்காகவும்,செய்து கொடுப்பதற்காகவும் இன்றையதினம் (02.02.2018) மேற்படி அலுவலகத்திற்கு அலுவலகரீதியாக அவரை சந்திக்க வந்த பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி, மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் அவர்கள் அந்த தொகை ரூ.44,140/-ஐ கைப்பற்றினார். அதற்கு அடுத்தாற்போல் இருந்த கண்டெய்னரின் மற்றொரு பிரிவு காலியாக இருந்தது. அதுபற்றி விசாரிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்கள் தற்செயல் விடுப்பில் இருப்பதாக தெரிவித்தனர். பின்னர் வாகன ஓட்டுநர் உரிமத்திற்காக போட்டோ எடுக்கக்கூடிய, தெற்குபார்த்த வாசலுடன் கூடிய சிறிய அறையில் (ELCOT) இருந்த எல்காட் ஊழியரான காலம்-5ல் வரிசை எண்.9ல் கண்ட திரு.வீரவடிவேல்முருகன் என்பவரிடம் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.லட்சுமணன் அவர்கள் தன்னையும், அரசு சாட்சிகள் திரு.குருசாமி,திரு.கருப்பசாமிமற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகம் செய்து, அவரையும், அவரது இருக்கை மற்றும் அறையையும் சோதனை செய்யஅங்கு சந்தேகத்திற்கிடமாக முகாந்திரமின்றி பணமோ, பொருளோ இல்லை. அதைத்தொடர்ந்து, அந்த எல்காட் அறைக்கு அருகே இருந்த வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் வர, சிறிதுதூரத்தில் கிழக்கு பார்த்து கணிணி அறை இருந்தது. அந்த அறையில் நுழைந்து பார்க்க காலம்-5ல் வரிசை எண்.8ல் கண்ட திரு.கனகராஜ் என்பவரிடமும், அந்த கணிணி அறைக்கு எதிரே வடக்குபார்த்தார்போல் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையினுள் சென்று அங்கிருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் காலம்-5ல் வரிசை எண்.2ல் கண்ட திரு.நடராஜன் அவர்களிடமும், தொடர்ந்து அவரது அறைக்கு எதிர்த்தார்போல் காலம்-5ல் வரிசை எண்.3 மற்றும் 5 முதல் வரிசை எண்.8 வரையிலான அலுவலர்களிடமும் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.லட்சுமணன் அவர்கள் தன்னையும், அரசு சாட்சிகள் திரு.குருசாமி,திரு.கருப்பசாமிமற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகம் செய்து, அவரவர்களையும், அவரவர் இருக்கைகளையும் மற்றும் அறைகளையும் சோதனை செய்யஅங்கு சந்தேகத்திற்கிடமாக முகாந்திரமின்றி பணமோ, பொருளோ இல்லை. அதில் காலம்-5ல் கண்ட வரிசை எண்.4வது நபரான கணக்கர் திரு.ஜெயகிருஷ்ணன் என்பவரையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது இருக்கையில் ரூ.1696/- இருந்தது. அதுபற்றி கேட்க, அதற்கு அவர் அந்த பணம் ரூ.1696/-ம், கடந்த 29.01.2018ஆம் தேதி முதல் 01.02.2018ஆம் தேதி வரை போக்குவரத்து வாகனங்களுக்கு கட்டிய வரியில், ஒரு சதவீதத் தொகையை உடல்உழைப்பு தொழிலாளர் நல

வாரியத்திற்கு செலுத்துவதற்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை என்றும், அந்த தொகை கையிருப்பு இருப்பதற்கு அவரால் பராமரிக்கப்படும் வட்டார போக்குவரத்து அலுவலக கணக்குப்பதிவேட்டில் பதிவுகள் உள்ளது என்றும் தெரிவித்ததால், அரசு சாட்சிகள் முன்னிலையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் மேற்படி கணக்குப்பதிவேட்டை பார்வையிட 01.01.2018ஆம் தேதி முடிவில் ரூ.1696/- ரொக்கமாக இருந்ததாக இருந்ததால்,அந்த பணம் ரூ.1696/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டு, அந்த கணக்குப் பதிவேடு, விசாரணைக்காக அவரிடமிருந்து துணை ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் துணை ஆய்வுக்குழு அலுவலரால் வட்டார போக்குவரத்து அலுவலரிடமிருந்து அலுவலர்களுக்கான வருகைப்பதிவேடுகள் இரண்டு கைப்பற்றப்பட்டன. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக ஒரு திடீர் இணை ஆய்வு அறிக்கை மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து மடிக்கணினியில் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் மேற்பார்வையில் தட்டச்சு செய்து நகல் எடுக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று 02.02.2018ம் தேதி 17.00 மணிக்கு முடிக்கப்பட்டது.எனவே நேற்று (02.02.2018) எனது தலைமையில் வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகாசி, விருதுநகர் ரோடு, திருத்தங்கல்லில் திடீர் இணை ஆய்வு நடத்தி கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் என்று சந்தேகப்படத்தக்க வகையில் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளர் அ4, திரு.செல்வக்குமார் வைத்திருந்த ரூ.44,140/-க்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி திரு.செல்வக்குமார், உதவியாளர் அ4 என்பவர்சந்தேகப்படத்தக்க வகையில் பணம் ரூ.44,140/-க்கு அவர் சரியான முகாந்திரம் கூறமுடியாததால் அவர்மீதும் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று 03.02.2018ம் தேதி காலை10.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (திரு.லட்சுமணன்) துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம்.

Received the complaint and registred case in Virudhunagar V &AC Crime No.01/18 u/s 13(2) r/w 13(1) (d) prevention of corruption act 1988 on 03.02.2018 at 10.00 am orginal first information report (Fir), complaint is submitted to the honourable Chief Judicial Magistrate cum Special Judge, Srivilliputhur. Copies submitted to the concerned Officers. (sd) R.Srinivasaperual, 03.02.18, DSP, (V&AC), Virudhunagar.